**ஆனமடுவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 27 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை ஆனமடுவை பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வழங்கு பொருட்கள் மற்றும் உபகரண செலவான ரூபா 157,830 தொகை கணக்குகளில் சீராக்கப்பட்டிராமையால் மிகையானது அந்த பெறுமதியால் அதிகரித்தும், பிடியாணைக் கட்டணம் மற்றும் தண்டப்பண வருமானத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 250,000 தொகையான தவறான மதிப்பீட்டினால் அந்த வருமானம் மற்றும் ஆண்டிற்கான மிகை அந்த பெறுமானத்தால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக பெறப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,490,265 தொகை ஆண்டின் நீதிமன்ற தண்டப்பண வருமானத்தினுள் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், 2015 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களிற்காக நீதிமன்ற தண்டப்பண வருமானம் மதிப்பிடப்பட்டு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வாசிகசாலை தண்டப்பணம் ரூபா 670,050 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 498,500 தொகையான நிலுவை நீதிமன்ற தண்டப்பணங்களின் தவறான மதிப்பீடொன்றும் மேலுமொரு தவறுதலான தொகையும் உள்ளடங்கியிருந்ததுடன், அந்த கணக்கில் இருக்க வேண்டிய சரியான மீதி ரூபா 2,070 ஆகும். அதன் காரணமாக வாசிகசாலை தண்டப்பண வருமானம் மற்றும் ஆண்டின் மிகை ரூபா 667,980 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் மீதியாக கணக்கில் ரூபா 390,656 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய மீதி சான்றுறுதிப்படுத்தல்களின் பிரகாரம் தொடர்ந்தும் செலுத்த வேண்டிய மீதியொன்று காணப்படவில்லை.

(உ) முன்னைய ஆண்டிற்குரிய ஏனைய நிலுவை வருமானங்களை இனங்கண்டு கணக்கு வைக்காமையால் 2014 ஆம் ஆண்டிற்கான ரூபா 615,762 தொகையான வருமானம் 2015 ஆம் ஆண்டின் போது கிடைத்த போது ஏனைய நிலுவை வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமையால் அந்த வருமானம் அந்த பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது

(ஊ) ஏனைய வருமானமாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 13,709,445 தொகையினுள் ரூபா 7,745,081 தொகையான முத்திரைக் கட்டணம் மற்றும் ரூபா 5,682,541 தொகையான கைத்தொழில் கடன்பட்டோர் மீதி உள்ளடக்கப்பட்டிருந்தமையால் அந்த கணக்கு ரூபா 13,436,622 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) நிலுவை முத்திரைக் கட்டணக் கணக்கிற்கு ஆண்டினுள் மற்றும் முன்னைய ஆண்டிற்காக பெறப்பட்ட ரூபா 8,728,690 தொகையான முத்திரைக் கட்டணத்தை சீராக்காமையால் நிலுவை முத்திரைக் கட்டணக் கணக்கு அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) ஒய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டிய 4,464,126 ஆன மீதியினுள் ஆண்டினுள் செலுத்த வேண்டிய பங்களிப்பு மற்றும் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை சீராக்காமையால் அந்த கணக்கின் செலுத்த வேண்டிய மீதி ரூபா 2,298,032 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) Airtel கோபுரங்களுக்காக 2015 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்தில் கிடைக்க வேண்டிய ரூபா 38,500 தொகையான கட்டணம் வருமானங்களாகவும் கடன்பட்டோரின் கீழும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 4,387,374 தொகையும், 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 5,333,376 தொகையுமாக ரூபா 9,720,750 தொகையான மூலதன மானியங்களை மீளாய்வாண்டினுள் மாகாண சபையிலிருந்து பெற்றுக்கொண்ட மீண்டெழும் வருமானமாக கணக்கு வைத்தமையால், மீளாய்வாண்டின் மீண்டெழும் வருமானம் அந்த பெறுமானத்தால் அதிகரித்தும், முன்னைய ஆண்டிற்குரியதாக கிடைத்த ரூபா 4,387,374 தொகையான மூலதன மானிய பெறுவனவுகள் மீளாய்வாண்டிற்குரிய பெறுவனவுகளாகவும் கணக்கு வைத்தமையின் காரணத்தால் ஆண்டிற்கான மிகை அந்த பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) செலுத்த வேண்டிய முத்திரை வரி ரூபா 38,545 தொகையானது நடைமுறைப் பொறுப்பொன்றாகவும், பெற வேண்டிய மூலதன மானியங்களான ரூபா 5,682,542 தொகை மூலதன வருமானங்களாகவும் வருமான மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட்டிராததுடன், பெற வேண்டிய தொகைகளும் நடைமுறை சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) ஏனைய வருமானங்களாக வருமான மற்றும் செலவினக் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 100,000 தொகையான பணம் வருமானச் செலவின வருமானமொன்றல்லாவதுடன், அது 2014 ஆம் ஆண்டின் கைத்தொழில் கடன்பட்டோரிடமிருந்து பெற்ற பணமாகும். இதன் காரணமாக ஆண்டிற்கான மிகை ரூபா 100,000 இனால் அதிகரித்தும், நடைமுறைச் சொத்துக்கள் அந்த அளவினால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(க) ஏனைய வருமானங்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 46,678 ஆன மீதியினுள் 2014 ஆம் ஆண்டிற்காக கைத்தொழில் கடன்பட்டோருக்காக பெறப்பட்ட ரூபா 25,000 தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(கா) நடைமுறை பொறுப்புகளின் கீழான ரூபா 2,074,203 தொகையினுள் வைப்புக்கள் மற்றும் ரூபா 89,967 தொகையான ஓய்வூதிய வைப்புக்கள் தொடர்பில் கணக்கீட்டு அடிப்படையொன்று வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த மீதி பரீட்சை மீதியில் முத்திரை மீதியாக செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபைக்கு பெறவேண்டிய தொகை ரூபா 32,385,605 மற்றும் செலுத்த வேண்டிய தொகை ரூபா 22,956,615 ஆக இருந்ததுடன், அவற்றுள் ஒரு வருட காலத்தினை விஞ்சிய பெற வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17,131,939 மற்றும் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமதி ரூபா 6,228,277 ஆகும்.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமையால் ரூபா 2,826,082 கூட்டுத்தொகையான கணக்கு மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீசீலனை செய்ய முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 26,935,349 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,583,021 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு

**செலவினக் கட்டமைப்பு**

மீளாய்வாண்டிற்கான சபையின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம் உரிய விலகல்களுடன் கீழே தரப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | பாதிடப்பட்ட | உள்ளபடியான | விலகல் |
|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **மீண்டெழும் செலவினம்** | | | |
| ஆளணி வேதனங்கள் | 44,730 | 43,727 | 1,003 |
| ஏனையவை | 28,253 | 15,504 | 12,749 |
| உப கூட்டுத்தொகை | 72,983 | 59,231 | 13,752 |
| மூலதன செலவினம் | 131,820 | 18,398 | 113,422 |
| **மொத்தம்** | **204,803** | **77,629** | **127,174** |

**2.3 செயற்படு மூலதன முகாமைத்துவம்**

மீளாய்வாண்டின் செயற்படு மூலதன விகிதம் ( நடைமுறை சொத்துக்கள் : நடைமுறை பொறுப்புக்கள் ) 2.3 : 1 ஆக இருந்தது. அதற்கு முன்னைய ஆண்டில் அது 1.5 : 1 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் செயற்படு மூலதன விகிதம் அதிகரித்திருந்தது.

**2.4 வருமான நிருவாகம்**

**2.4.1 வருமானம் சேகரித்தலினான செயலாற்றல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(ஆ) பிரதேச சபையினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | விலகல் |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 2,777 | 1,870 | 907 |
| குத்தகை வாடகை, கடைக் கூலி | 13,126 | 10,731 | 2,395 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,138 | 963 | 175 |

முன்னைய ஆண்டையும் மீளாய்வாண்டையும் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்த வீதவரியும் வரியும் அதற்கு முன்னைய ஆண்டில் அறவிடப்பட்ட வருமானத்தை அண்மிக்க முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டினுள் சபையினால் நிலுவை வருமானம் மற்றும் பட்டியலிடப்பட்ட வருமானங்களை அறவிடுவதிலான செயன்முன்னேற்றம் பின்வருமாறு ஆகும்.

| வருமானத் தலைப்பு | 2015.01.01 இல் நிலுவை வருமானம் | நிலுவையிலான அறவீடு | நிலுவையிலான அறவீட்டின் சதவீதம் | ஆண்டினுள் பட்டியலிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானத்திலான அறவீடு | அறவீட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | % | ரூபா '000 | ரூபா '000 | % |
| வீதவரியும் வரியும் | 3,145 | 771 | 24 | 1,905 | 963 | 51 |
| வாடகை | 230 | 155 | 67 | 945 | 814 | 86 |
| குத்தகை வாடகை | 544 | 9 | 2 | 8,098 | 7,157 | 88 |
| ஏக்கர் வரி | 315 | 34 | 11 | 61 | 16 | 26 |

(i) நிலுவை வீதவரி மற்றும் பட்டியலிடப்பட்ட வருமானத்தின் அறவீடு ஆண்டினுள் மந்தமான நிலையில் இடம்பெற்றிருந்ததுடன், நிலுவை வருமானம் பட்டியலிடப்பட்ட வருமானத்தை விடவும் குறைந்த மட்டத்தில் நிலவியது. இதன் காரணமாக கடந்த ஆண்டுகளின் நிலுவை தொகைக்கு ஆண்டின் நிலுவையும் சேர்க்கப்பட்டமையால் ரூபா 3,317,221 தொகைான நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ii) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 129 (2) (அ) மற்றும் (ஈ) பிரிவுகள் மற்றும் 158 ஆவது பிரிவின் பிரகாரம், நிலுவை வீதவரி மற்றும் நிலுவை ஏக்கர் வரி ஆகியவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கடந்த ஆண்டுகளின் நிலுவை கடைக் கூலியின் பெறுமதி ரூபா 229,939 ஆக இருந்ததுடன், ஆண்டின் பட்டியலிடப்பட்ட வருமானத்தின் நிலுவை ரூபா 130,920 ஆகும். ஏக்கர் வரி நிலுவை அறவீடு மந்தமாக இடம்பெற்றிருந்தது.

### 2.4.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2015 சனவரி முதல் ஒக்தோபர் மாதம் வரையிலும் ரூபா 2,487,120 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் கிடைத்திருந்ததுடன், எஞ்சிய இரண்டு மாதங்களுக்காக கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்தை மதிப்பீடு செய்து கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. மூன்று மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகங்களிலிருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்களை கணிப்பிட்டு கணக்குகளில் உள்ளடக்குவதற்கு பதிலாக, ஒரு மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலிருந்து மீளாய்வாண்டின் சனவரி மாதம் முதல் மே மாதம் வரை கிடைத்திருந்த ரூபா 974,559 தொகையும் எஞ்சிய காலப்பகுதிக்காக ரூபா 2,070,628 தொகையும் மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

**3. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்**

வடமேல் மாகாண பிரதம செயலாளரின் 2010 ஒக்தோபர் 05 ஆந் திகதிய வ/மா/செ/05/03 கணக்காய்வு குழு இலக்கம் கொண்ட கடிதத்தின் பிரகாரம், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் காலாண்டிற்கு ஒன்று வீதம் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் எதுவித கூட்டத் தடவையும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

ரூபா 597,668 பெறுமதியான உழவு இயந்திரமொன்று 03 வருடங்களாகவும், பெறுமதி மதிப்பிடப்படாத சிறிய குபோடா உழவு இயந்திரமொன்று 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செயலற்றிருந்தது.

(ஆ) **மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

பின்வரும் விடங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்கான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி கணிப்பிடப்பட்டிராததுடன், 2013 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும் 2013 ஆம் ஆண்டை விட மீளாய்வாண்டின் இறுதியளவில் அபிவிருத்தி மற்றும் ஏனைய பணிகளில் விரிவாக்கமொன்று இடம்பெற்றிருந்த போதிலும், அதன் பிரகாரம் பதவியணியிலான மாற்றம் இடம்பெற்றிருக்கவில்லை.

(ii) 2013 ஆம் ஆண்டில் (இறுதியாக) தயாரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 07 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இரண்டு நிரந்தர உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், மேலும் 10 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சபைக்கு இணைப்பு செய்யப்பட்டிருந்தனர்.

(iii) 2013 ஆம் ஆண்டின் ஆரம்ப நிலையின் 11 பதவிகளுக்காக 56 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த நிலையின் 14 பதவிகளுக்காக 66 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். 03 ஆரம்ப நிலை பதவிகளில் 03 வெற்றிடங்கள் நிலவியதுடன், அந்த பதவிகளில் 15 பேர் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**3.3 தீர்க்கப்படாத ஊழியர் கடன்**

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவை ஊழியர் கடன் முற்பணம் ரூபா 4,840,410 ஆக இருந்ததுடன், அவற்றுள் ரூபா 72,912 தொகை பல வருடங்களாக அறவிடப்படாமல காணப்பட்டது. அந்த கடனை அறவிடுவதற்காக அரச நிதி பணிப்பாளர் நாயகத்தின் 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதிய PED/RED/2015/08 ஆம் இலக்க பொது (1) இலக்க கடிதத்தின் 4:3 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

## 4. **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) வருமான முகாமைத்துவம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) சொத்து முகாமைத்துவம்
(ஊ) இருப்புக் கட்டுப்பாடு